# செலான் வங்கியின் முழுக்கதை

# செலான் வங்கி மீது எமக்கு நம்பிக்கையுள்ளது



அஷோக் பதிரகே
தலைவர் - சொப்ட்லோஜிக்
நிர்வாக இயக்குனர் - ஆசிரி ஹொஸ்பிடல் குரூப்



இஷார நாணயக்கார
உப தலைவர்
எல்.ஓ.எல்.சீ. குழுமம்



லக்ஷ்மன் நியன்கொட
உப நிர்வாக இயக்குனர்
பவர் அன்ட் கம்பனி லிமிடெட்



இராஜ் விஜேசிங்க
தலைவர்
பார்க்லீக் குரூப்

**கே: இத்தருணத்திலும் செலான் வங்கியுடன் தொடர்ந்து இருக்க ஏன் தீர்மானித்தீர்கள்?**

ப: ஏனெனில் நாம் வங்கியின் மீதும் இலங்கை வங்கி நடைமுறை மீதும் அதீத நம்பிக்கை கொண்டுள்ளோம். இலங்கையின் மிகப்பெரிய தனியார் வங்கிகளில் ஒன்றான செலான் வங்கியை மத்திய வங்கி கைவிடாது என நம்பினோம். செலான் எப்போதும் எமது தேவைகளை நன்குணர்ந்து அதற்கேற்ப செயலாற்றியது. எமது முழுக் குழுமமும் செலான் வங்கியின் கடன் அட்டையை ஏற்றுக்கொள்வதுடன் வங்கியின் இக்கட்டான நிலையில் சில நிறுவனங்கள் செலான் கடன் அட்டைகளை ஏற்றுகொள்ள மறுத்த வேளை நாம் வங்கியின் மீது இருந்த நம்பிக்கையின் காரணமாக தொடர்ந்தும் ஏற்றுக் கொண்டோம்.

**கே: செலான் வங்கியின் எதிர்காலம் பற்றி உறுதியுள்ளதா?**

ப: சந்தேகமின்றி. இலங்கையில் சிறந்த கட்டுப்பாடும், மேற்பார்வையும் உள்ளது. அத்துடன் புதிய பணிப்பாளர் சபை சுயாதீன-மாக செயற்படுகின்றது. அத்துடன் செலான் அரசவுடமையாகும் தேவையிராது. ஏனெனில் தனியார் வங்கியொன்றுக்கு தேவையான கட்டமைப்பும் அடிப்படை காரணிகளும் காணப்படுகின்றன.

**கே: அடுத்த வரும் மாதங்கள் பற்றி?**

ப: சர்வதேச பொருளாதாரத்தை பார்க்கையில் வர்த்தக சூழல் சாதகமானதாக இருக்கப்போவதில்லை. அதன் பாதிப்பை இலங்கையிலும் அனைத்து தொழிற்துறைகளிலும் காணலாம். நாமும் அதற்கு தயாராகி சிறந்த முகாமைத்துவ கட்டமைப்புடன் எதிர்கொள்ள வேண்டும். இன்னும் 12 மாதங்களில் நிலைமை சுமூகமாகி அனைத்தும் சரிவர வெற்றிகரமாக இயங்க ஆரம்பிக்கும். அதுவரை நாம் எம்மை தயார்படுத்தி சிறந்த பலன்களை பெற தயாராக வேண்டும்.

**கே: செலான் வங்கியிலிருந்து அநேகர் தமது முதலீடுகளை மீளப்பெறும் போது நீங்கள் ஏன் அவ்வாறு செய்யவில்லை?**

ப: எல்.ஓ.எல்.சீ. குழுமத்தின் நிறுவனங்கள் மற்றும் சில துணை நிறுவனங்களின் பிரதான வங்கிச் சேவையாளர் செலான் வங்கியாகும். கோல்டன் கீ நிறுவனத்தின் சரிவை ஈடுசெய்ய செலான் வங்கியின் அவர்களுக்கான பங்கு விற்பனை செய்யப்படும் என செலிங்கோ குழுமம் திடிரென அறிவித்தமையே செலான் வங்கியானது தனது சொத்துக்களை விற்று கோல்டன் கீ நிறுவனத்தின் கடன்களை ஈடுசெய்ய போகிறது என தவறுதலாக எண்ணி உடனடியாக அனைவரும் மீளப்பெறல்களை செய்தனர். இவ்வாறான சந்தர்ப்பத்தில் மீளப்பெறல் செய்ய வேண்டிய தேவை எமக்கில்லை. அத்துடன் அடிப்படையில் வங்கி உறுதியாக உள்ளது.

**கே: செலான் இந்நிலைமையில் இருந்து மீளும் என கருதுகின்றீர்களா?**

ப: ஆம். செலான் இந்நிலைமையில் இருந்து மீளும் என எனக்கு நம்பிக்கை உள்ளது. இலங்கை மத்திய வங்கி சரியான தருணத்தில் தலையிட்டு நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது. அத்துடன் வங்கியின் முகாமைத்துவம் இலங்கை வங்கியின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு புதிய பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் செலிங்கோ குழுமத்திலிருந்து விடுபட்டு சுயாதீனமாக செயற்படக் கூடியதாகவுள்ளது. அத்துடன் நம்பிக்கை மீண்டும் வலுப்பெற்றுள்ளது.

**கே: ஏன் நம்பிக்கை மீண்டும் வலுப்பெற்றுள்ளது என கருதுகிறீர்கள்.**

ப: இலங்கை வங்கியின் துணையுடன் நியமிக்கப்பட்டுள்ள புதிய பணிப்பாளர் சபை சுயாதீனமாக இயங்குவதற்கு உறுதியளித்துள்ளதுடன் அதுவே தேவையு-மானது. செலான் வங்கி வாடிக்கையாளர்களுக்கு எனது செய்தி என்னவெனில் இச்சந்தர்ப்பதில் கலக்கமடையத் தேவையில்லை, வர்த்தகம் என்றும் போல் தொடரட்டும்.

**கே: செலான் வங்கியுடன் தொடர்ந்து இருக்க காரணம் என்ன?**

ப: நாம் செலான் வங்கியுடன் தொடர்ந்து பணியாற்றி வருகின்றோம். உண்மையில் எமது குழுமத்தை சேர்ந்த அநேகமான நிறுவனங்கள் செலான் வங்கியுடனேயே பணியாற்றி வருகின்றன. அவர்கள் தொடர்ந்து வழங்கி வந்த சேவைத்தரம் எம்மை மிகவும் திருப்தி கொள்ள வைத்தது. இன்னும் எமது இணைப்பு தொடர்கின்றது. அதில் மாற்றமில்லை.

**கே: தற்போதைய நிலையில் இருந்து செலான் வங்கி எவ்வாறு மீளும் என கருதுகின்றீர்கள்?**

ப: மத்திய வங்கியின் தலையீடு மற்றும் நிபுணத்துவம் மிக்க புதிய பணிப்பாளர் சபையின் நியமணம் என்பன சிறப்பாக இயங்க உதவும் என நம்புகிறோம். அத்துடன் அவர்க-ளின் நிர்வாகமும் சிறப்பாக இருக்கும் என எண்ணுகிறேன்.

**கே: மிகப்பெரிய மீளப்பெறல்களுக்கு செலான் வங்கி முகங்கொடுத்த போதும் ஏன் நீங்கள் அவர்களுடன் தொடர்ந்து இருந்தீர்கள்?**

ப: நாம் நீண்ட காலமாக செலான் வங்கியுடன் கொடுக்கல் வாங்கல்களை செய்து வருவதால் இச் சந்தர்ப்பத்தில் தேவையற்ற விதத்தில் கலக்கமடையத் தேவையில்லை, ஏனெனில் இதுவரை அவர்களின் சேவையில் எமக்கு எவ்வித பிரச்சினையும் இருந்ததில்லை. மத்திய வங்கி தலையிட்டு புதிய நிர்வாக குழு ஒன்றை ஏற்படுத்தி தொடர்ந்து சீராக இயங்க வழி செய்துள்ளது. எனவே வைப்புக்களை மீளப்பெறும் அவசியம் இருக்கவில்லை.

**கே: செலான் வங்கியினால் இந் நிலைமையில் இருந்து மீள முடியும் என நம்புகின்றீர்களா?**

ப: சிறந்த நிர்வாகத்தின் கீழ் நிச்சயமாக முடியும். தற்போது சுயாதீனமாக செயற்படக்கூடிய மத்திய வங்கியின் கீழ் செயற்படும் பணிப்பாளர் சபையொன்று உள்ளது. சிறப்பான சட்டதிட்டங்களுக்கு அமைய தற்போது செயற்படுகின்றமையால் மீண்டும் தளம்பல் நிலையை அடையாது.

**கே: செலான் வங்கியின் வங்கிச் சேவையை தொடர்ந்து பெறுவீர்களா?**

ப: நாம் எப்போதும் செலான் வங்கி பற்றி மகிழ்ச்சியே அடைந்துள்ளோம். விசேடமாக அவர்களின் சேவைத்தரம். ஆகவே சேவையை நிறுத்த எனக்கு எந்த காரணமும் இல்லை.



நேர்காணல்:
சாவித்ரி ரொட்ரிகோ